தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர்,மண்டல பொறுப்பாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர்கள் தனுஷ், எம்.குமார், (வாசுதேவநல்லூர்) பி.எம்.ராமஜெயம், (சங்கரன்கோவில்) உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தேனி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இந்த நிர்வாகிகள் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி சிறப்பு உரையாற்றினார். உடன் சரவணக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட துணைச் செயலாளர் செந்தில் முருகன், திருகண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், முருகேசன் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஆட்சியர் மருத்துவர். ச.உமா தலைமை ! - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. – வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி. – பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை!

இராசிபுரத்தில் 1,104 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.77.57 கோடியில் வங்கி கடன் இணைப்பு - கடனுதவிகள்!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், ஜூன். 14-

சென்னை, கலைவாணர் அரங்கில் மகளிர் சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி, 2024 -2025 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது, மாநில அளவில் நடைபெற்ற பன்முக கலாச்சார போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசு மற்றும் நல உதவித் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு சென்னை, கலைவாணர் அரங்கில் மகளிர் சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி, 2024 -2025 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது, மாநில அளவில் நடைபெற்ற பன்முக கலாச்சார போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, சுஜிதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர். ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 1,104 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ரூ.77.57 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கி, பேசும்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கு இணங்க இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்துார் வட்டாரங்கள், இராசிபுரம் நகராட்சி, அத்தனூர், வெண்ணந்துார், பிள்ளாநல்லூர், ஆர்.புதுப்பட்டி, நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி மற்றும் பட்டணம் பேரூராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் 9,043 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 1,02,552 உறுப்பினர்களும் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 3,985 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 41,380 உறுப்பினர்களும் என மொத்தம் 13,028 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 1,43,932 உறுப்பினர்களின் சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

ஊரகம் மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2021 - 2022 ஆம் ஆண்டு 9,081 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.499.20 கோடி மதிப்பிலும், 2022-2023 ஆம் ஆண்டு 10,751 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.658.62 கோடி மதிப்பிலும், 2023-2024 ஆம் ஆண்டு 10,082 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.674.69 கோடி மதிப்பிலும், 2024-2025 ஆம் ஆண்டு 14,516 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.886.00 கோடி மதிப்பிலும் மற்றும் 2025-2026 ஆம் ஆண்டு 1,562 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.113.96 கோடி மதிப்பிலும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இன்று நடைபெறும் விழாவில் 1,091 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.77.16 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

இவற்றில் ஊரக பகுதிகளில் 805 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரை (10,615 பயனாளிகள்) ரூ.77.57 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நாமக்கல் மாவட்டத்தில் 2021 -2022 ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை 45,992 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2,832.47 கோடி வங்கி கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், போதமலையில் கீழூர், மேலூர், கெடமலையை இணைக்கும் வகையில், ரூ.139.65 கோடி மதிப்பீட்டில், 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இராசிபுரம் தொகுதியில் ரூ.53.39 கோடி மதிபில் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இதுபோன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் இராசிபுரம் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது என அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார் .

தொடர்ந்து கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையிலும், பெண்களின் வாழ்க்கை தரத்தை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மகளிருக்கான விடியல் பயணம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் கடன் தள்ளுபடி, வங்கிகளில் 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்.

புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் காலை உணவுத்திட்டம், மகளிருக்கும் கலைஞர் உரிமைத் தொகை. கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 6,500 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது . மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் அரசு பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் அதிகளவில் பயன் பெற வேண்டுமென்று அரசு தேர்வின் தமிழ் கட்டாய பாடத்தை அறிவித்தார்கள். இதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர்.கவிதா சங்கர், துணை தலைவர் கோமதி ஆனந்தன், ஒன்றிய திமுக செயலாளர் கே.பி ராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி, வெண்ணந்துார் பேரூராட்சி தலைவர் ராஜேஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) /திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) (பொ) சு. வடிவேல், உதவித்திட்ட அலுவலர் அ.காளிதாஸ், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய அமைப்பாளர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்.

43 (அ) வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

வட்டப் பொறுப்பாளர் ஜெ.பிரேம்ஆனந்த் அறிக்கை!

சென்னை, ஜீன்14

வட்டப் பொறுப்பாளர் ஜெ.பிரேம்ஆனந்த் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட கழக ஆலோசனைக் கூட்டம் சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர், ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா. லட்சுமணன், ஆகியோர் ஆலோசனைப்படி இன்று (14.06.2025 சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை புதுவண்ணை பாலகிருஷ்ணன் முதல் தெருவில் உள்ள எனது இல்லத்தில் உள்ள அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் மு.டில்லிதுரை தலைமையில் நடைபெறுகிறது.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, மற்றும் கழக ஆக்க பணிகள்

ஆகையால் இக்கூட்டத்திற்கு 43(அ) வட்ட கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டப் பொறுப்பாளர் ஜெ.பிரேம் ஆனந்த் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர்.எஸ்.சேகர் தலைமையில் பகுதி துணை செயலாளர் பி.புகழேந்தி வரவேற்புரையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நல திட்டங்கள் உதவிகள் வழங்கும் விழா தாம்பரம் மாநகர கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. அவர்கள் தாம்பரம் மாநகர துணை செயலாளர் தாம்பரம் மாநகர மேயர்.க.வசந்தகுமாரி. தலைமை கழக பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் அவர்கள் மற்றும் செ.ரவிச்சந்திரன் ஜெபதுரை, எஸ்சிவகுமார், எஸ்.ஐசக். டி. கே.கொடி ஆர்.பரஞ்சோதி டிப்பர்.ரவி, ஆர்.ரோமன் நன்றி யுரை ஜே மணிவண்ணன் கே. சுந்தர் மற்றும் மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், கழக தோழர்கள் பொது மக்கள் பங்கேற்றனர்.

17ஆம் தேதி சிவகங்கை வருகை

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூன் 14 -

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 17ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்தும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். அதன்படி வருகிற 17ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சிவகங்கை மாவட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இது குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல் பேரில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக சென்று கழக அரசின் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விதம் பொதுமக்களுக்கு பல்வேறு அரசு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்குதல் அரசின் திட்டப் பணிகள் மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்தல் குறித்து ஆய்வு ஆகிய பணிகளை மேற்கொள்கிறார் . அதனைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகளை சந்தித்து உரையாடல் நடத்துகிறார் .அதன்படி வருகிற 16ம் தேதி தேனி மாவட்டம் செல்கிறார் .17ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சிவகங்கை வருகை தர உள்ளார்.

சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான பந்தலில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு பல்வேறு அரசுதுறைகளின் துறையின் சார்பில் நலத்திட்ட உதவி வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார். முன்னதாக மதுரையில் இருந்து கார் மூலம் வருகை தரும் துணை முதலமைச்சர் நீர் நிலை வரத்து பணிகள் மராமத்துணிகளை ஆய்வு மேற்கொள்கிறார். அதனை தொடர்ந்து மாலையில் திருப்பத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், சார்புஅணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுடன் ஆலோசனை நடத்துகிறார். அதன் பின்னர் மதுரை செல்கிறார்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர்.பெரிய கருப்பன் கூறினார்.

முன்னதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் துணை முதலமைச்சர் பங்கேற்கும் மேடை மற்றும் பொதுமக்கள் அமரும் இடம் ஆகிய வற்றை ஆய்வு செய்தார்கள். அவருடன் சிவகங்கை நகர் மன்ற தலைவர் நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், ஒன்றிய செயலாளர் கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்தகாளை, மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள், சென்றிருந்த னர்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ.ஸ்டாலின் பங்கேற்பு!

பெரம்பூர் வடக்கு - 34 'அ' வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் என்.கார்த்திபன் அறிக்கை!

சென்னை, ஜூன் 14

பெரம்பூர் வடக்குப் பகுதி 34 அ வட்ட கழக BLA-2, BLC ஆலோசனைக் கூட்டம் ஆந்திரா சபை கல்யாண மண்டபம், சீதாராம் நகரில் இன்று மாலை 6 மணியளவில் வட்ட செயலாளர் என்.கார்த்திபன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர் அ. முருகன் முன்னிலை வகிக்கிறார்.

மேற்கண்ட கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ.ஸ்டாலின் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட. பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் , மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக கமிட்டி உறுப்பினர்கள் (BLC) தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறார்.

இவ்வாறு கார்த்திபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு முன்னிலையில்

திருவொற்றியூர் 10வது வட்ட பாக முகவர்கள், பி.எல்.ஏ.2, பி.எல்.சி. கூட்டம்!

எஸ்.மோகன் ஆலோசனை! எஸ்.தமிழ்செல்வன் ஏற்பாடு!

சென்னை, ஜூன்.13

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 10வது வட்டக் கழகம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ்செல்வன் ஏற்பாட்டில் 1பாகமுகவர்கள் BLA2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தி.நகர் எஸ்.மோகன் தலைமையேற்று ஆலோசனை வழங்கினார்.

இதில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்தும், கழக ஆக்கப் பணிகள், திண்ணை பிரச்சாரங்கள், உறுப்பினர்கள் சேர்த்தல், எவ்வாறு வாக்குகள் பெறுவது போன்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், கிழக்கு பகுதி அவை தலைவர் ஆர். சி.ஆசைதம்பி, கிழக்கு பகுதி துணை செயலாளர் எம். வி.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், வட்ட செயலாளர் எம். எல்.சரவணன் மற்றும் மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மணலி துணை மின் நிலையத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா - கல்வெட்டு!

மின் கழக தொ.மு.ச. மாநில தலைவர் கே.சசிகுமார் திறந்து வைத்தார்!

சென்னை,ஜூன்.14-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு 5.6.2025 அன்று சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார் பேட்டை கோட்டம் 110 கி.வோ. துணை மின் நிலையம் மணலியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு கல்வெட்டு தமிழ் நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் திறந்து வைத்தார். தொமுச பேரவை கொடியினை மாநில துணை தலைவர் க.செல்வராஜ் ஏற்றி வைத்தா.ர் இனிப்புகள் மாநில துணை பொதுச்செயலாளர் செங்கல் பட்டு திட்ட செயலாளர் இரா.சக்கரை வழங்கினார்கள்

இந்நிகழ்வில் விழுப்புரம் முன்னாள் திட்ட செயலாளர் வேல்முருகன் மற்றும் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் ஏ.ராஜேந்தின்,டி. அருள்,மாறன்,ஆர்.சங்கர், சிவப்பிரகாசம் சதீஷ்,ஏழமலை, கணபதி, சண்முகம்,இ. எஸ்.பாரி,எம்.இளங்கோவன் ,வேதமணி,ரவி,மோகன், தசரதன்,பி.சீனு, முனுசாமி,இரா. ஜகன்நாதன் முகோட்ட ,கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்தனர். 200 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு 5.6.2025 அன்று சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார் பேட்டை கோட்டம் 110 கி.வோ. துணை மின் நிலையம் மணலியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு கல்வெட்டை தமிழ் நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் திறந்து வைத்தார். மாநில துணை தலைவர் க.செல்வராஜ், துணை பொதுச்செயலாளர் இரா.சக்கரை ஆகியோர் இனிப்பு வழங்கினர். 200 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விழுப்புரம் முன்னாள் திட்ட செயலாளர் வேல்முருகன் மற்றும் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் ஏ.ராஜேந்தின்,டி. அருள்,மாறன், ஆர்.சங்கர், சிவப்பிரகாசம் சதீஷ்,ஏழமலை, கணபதி, சண்முகம், இ.எஸ்.பாரி, எம்.இளங்கோவன், வேதமணி, ரவி,மோகன், தசரதன், பி.சீனு, முனுசாமி, இரா.ஜகன்நாதன் முகோட்ட, கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்தனர்.